

## சென்னையில்

# மெட்ரோ ரெயில் ஓட்டும் பெண்கள்!

சென்னை,ஜன.14—

சென்னையில் மெட்ரோ ரெயில் நிர்வாகம் பயணிகளை கவரும் வகையில் புதிய புதிய நிகழ்ச்சிக்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

மேலும் பொதுமக்கள் நாளுக்கு நாள் மெட்ரோ ரெயிலை பயன்படுத்துவது அதிகரித்தும் வருகிறது.

2015—ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த மெட்ரோ ரெயில் சேவையில் முதல் ரெயிலை ஓட்டியதே பெண் டிரைவர்கள் தான். பிரித்தி, ஜெயந்தி என்ற இரண்டு பெண்கள் தான் முதலில் மெட்ரோ ரெயிலை இயக்கியது குறிப்பிடத்தக்கது.

தற்போது 20—க்கும் மேற்பட்ட பெண் டிரைவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதில் ஒருவர் பெயர் சுருதி(வயது 19). டிப்ளமோ படித்தவர். அப்பா லோகநாதன் இறந்து விட்டார். அம்மா பத்மாவதி, அக்காள் வைசாலி(வயது 21), தங்கை ஸ்வேதா(வயது 16) ஆகியோருடன் வசித்து வருகிறார்.

இவர்கள் சொந்த ஊர் அரக்கோணத்தில் உள்ள தக்கோலம். தற்போது திருமுல்லை வாயலில் குடியிருந்து வருகிறார்கள்.

இந்த இளம் வயதில் ரெயில் டிரைவராக பணியாற்ற விருப்பம் வந்தது பற்றி மாலைமுரசு நிருபர்களிடம் மனம் விட்டு



தெரிவித்தார்.

இந்த வேலைக்கு வந்ததே குடும்பத்தைக் காப்பாற்றத்தான். எனது சகோதரி வைசாலி லேப் டெக்னிஷியனாக உள்ளார். தங்கை ஸ்வேதா பிளஸ்2 மாணவி.

### பயமாகத்தான் இருந்தது

2017 ஜூன் மாதம் இந்த பணிக்கு வந்தேன். முதலில் மெட்ரோ ரெயிலை ஓட்டும்போது சற்று திகிலாகத்தான் இருந்தது. பெண்கள் விமானம் ஓட்டுகிறார்கள், ராணுவத்தில் கூட வேலைப்பார்க்கிறார்கள். நாம் ஏன் ரெயில் ஓட்டக்கூடாது என்ற எண்ணம் தான் இப்போது என்னை மெட்ரோ ரெயில் டிரைவராக்கி உள்ளது.

ஒரு மாதம் நான் ரெயில் ஓட்டும் போது சீனியர் ஒருவர் என்னுடன் இருந்து பயிற்சி கொடுத்தார் அவ்வளவு தான்.

திருமங்கலத்தில் இருந்து சென்ட்ரல் வரை சுரங்க பாதையில் ரெயில் செல்லும் முதலில் சற்று பயமாகத்தான் இருந்தது. பிறகு பழகிவிட்டது.

ரெயிலை ஓட்டும் போது முதலில் எங்களுக்கு தெரிவது பயணிகள் தான். அவர்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல வேண்டும் என்பதே ரெயிலுக்குள் காலடி எடுத்து வைக்கும் போது எனக்கு தோன்றும்.

இந்த பொங்கலை எனது தாய், சகோதரிகளுடன் கொண்டாடுவது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. எனக்கு கரும்புண்ணா ரொம்ப பிடிக்கும்.

என் பள்ளிக்கூட தோழிகளை சந்தித்து அவர்களுடன் டென்னிஸ் விளையாட்டு விளையாட எனக்கு ரொம்பிடிக்கும். டி.வி. அவ்வளவாக பார்க்க மாட்டேன். எனக்கு இந்த வேலை மிகவும் பிடித்து விட்டது. சக டிரைவர்கள் கொடுக்கும் ஊக்கமும் அதற்கு ஒரு காரணம்.இப்போது திருமண ஆசை எனக்கு இல்லை. முதலில் சகோதரியின் திருமணம் பிறகு தான் என்னைப்பற்றி சிந்திப்பேன்.

### விஜய்சேதுபதி

பேஸ்புக் டுவிட்டரல் நான் இல்லை. அதை பார்க்கவும் எனக்கும் பிடிக்காது. நடிகர்களில் விஜய் சேதுபதியின் நடிப்பு எனக்கு பிடிக்கும். அவரது இயற்கையான பேச்சை கேட்டு ரசிப்பேன். நடிகைகளில் நஸ்ரியா தான் எனக்கு மிகவும் பிடித்தவர்.

ரஜினி, கமல் அரசியல் வருவது பற்றி கருத்து சொல்ல எனக்கு வயது இல்லை. இவ்வாறு அடக்கத்தோடு கூறினார். மெட்ரோ ரெயில் ஓட்டும் சுருதி அவர் லாவகமாக மெட்ரோ ரெயில் ஓட்டும் அழகே அழகு. பாராட்டிவிட்டு விடை பெற்றோம்.

இன்னொரு இளம் மெட்ரோ ரெயில் ஓட்டும் பெண் ரினா ஆறுமுகம். இவருக்கும் வயது 19 தான். தந்தை பெயர் ஆறுமுகம், தாயார் ராதிகா. தம்பி சூர்யா டிப்ளமோ சிவில் என்ஜினீயரிங் படித்து வருகிறார்.

நானும் 2017—ம் ஆண்டு ஜூன் மாதம் தான் இந்த பணியில் சேர்ந்தேன். இந்த வேலையில் சேரப்போவதாகக் கூறியதும் எனது பெற்றோரும் தம்பியும் என்னை பாராட்டியதோடு மட்டுமல்லாமல் ஊக்கப் படுத்தினார்கள். தண்டையார் பேட்டையில் இருந்து பஸ்சில் தான் வேலைக்கு வருவேன்.

பெண்கள் எந்த தொழில் செய்தாலும் அதில் சாதிக்க வேண்டும். முதன் முதலில் மெட்ரோ ரெயிலை ஓட்டும் போது சற்று பயமாகத்தான் இருந்தது. அதுவும் சுரங்க பாதையில் ஓட்டும் போது மனதுக்குள் கடவுளை நினைத்துக் கொள்வேன்.

### நஸ்ரியா

பயணிகள் பயணத்தின் போது அனுபவ ஆனந்தத்தை பார்க்கும் போது எனக்கு சந்தோஷமாக இருக்கும். அவர்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் தான் என்னை இந்த பணியில் திறமையாக செயல்பட வேண்டும் என்பதை உருவாக்கியது.

காலையில் 6 மணி ஷிப்டில் தான் வேலை பார்த்து வருகிறேன். தினமும் 5 முறை போய் வர வேண்டும்.

எங்களுக்கு என்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தனியாக தங்கும் அறை உள்ளது. எங்களைப் போல் ஆண்களுக்கும் தனியாக தங்கும் அறை உள்ளது.

வாக்கி டாக்கி மூலம் பணியில் இருக்கும் போது அதிகாரிகளிடம் பேசிக் கொள்வோம். ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அதன் மூலம் அதிகாரிகள் கூறுவது போல செயல்பட்டு கோளாறை சரி செய்துவிடுவோம்.

பெரிய அளவில் ரிப்பேர் எதுவும் வந்ததில்லை. வெளிநாட்டில் இருப்பது போல சென்னையில் ஓடும் மெட்ரோ ரெயிலை ஓட்டு வதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

### நொண்டிவிளையாட்டு

இந்த பொங்கலை பள்ளிக்கூட தோழிகளுடன் கொண்டாடப் போகிறேன். காலையில் குளித்து புது ஆடை அணிந்து பொங்கல் வைத்து சூரியனை வணங்கி கொண்டாடுவோம்.

அன்று டிவி பார்ப்பேன். சர்க்கரை பொங்கல்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். பொங்கலன்று நாங்கள் வைக்கும் இந்த பொங்கலை தோழிகளை வரவைத்து அவர்களுடன் அமர்ந்து சாப்பிடுவதில் எனக்கு ஒரு சந்தோஷம்.

நடிகர்களில் சூரியா எனக்கு பிடிக்கும்.. நடிகைகளில் எனக்கு பிடித்தவர் நஸ்ரியா தான்.

முதன் முதலில் விமான நிலையத்திலிருந்து நேரு பார்க் வரை தான் ரெயிலை ஓட்டினேன். ரொம்ப சந்தோஷமாக இருந்தது. தனியாக டிரைவர் சீட்டில் அமர்ந்து ரெயிலை ஓட்டி செல்லும் போது சற்று திரில்லிங்காகத் தான் இருந்தது.எனக்கு சக ஊழியர்கள் ஊக்கம் கொடுத்து வருகிறார்கள். எனக்குப் பிடித்த விளையாட்டு நொண்டி விளையாட்டு. நேரம் கிடைக்கும் போது எல்லாத் தோழிகளுடனும் நொண்டி விளையாடுவேன். எப்போதாவது தியேட்டர் சென்று சினிமா பார்ப்பேன் குடும்பத்தாருடன்.

சின்ன வயதில் பொம்மை ரெயில் ஓடுவதை பார்த்து கை தட்டி ரசித்து இருக்கிறேன். இந்த 19 வயதில் உண்மையான ரெயிலை நானே ஓட்டுவேன் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. இப்ப ரொம்ப ரொம்ப சந்தோசமாக இருக்கிறது. ஏதாவது வேலை கிடைக்க வேண்டும் என்ற கனவு தான் முதலில் இருந்து வந்தது.

### மாதராக பிறக்க மாதவம் செய்ய வேண்டும்

டாக்டர் ஆகனும் என்ஜினீயராக வேண்டும் என்ற எண்ணம் எல்லாம் இருந்ததில்லை. இப்போது நான் ஓட்டும் ரெயிலில் டாக்டர்கள் என்ன? பெரிய பெரிய வி.ஐ.பி.க்கள் எல்லாம் பயணிக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது என்கிறார் லீனா ஆறுமுகம்

இந்த இரண்டு டீன்ஏஜ் இளம் பெண்களும் மெட்ரோ ரெயிலை லாவகமா ஓட்டுவதும், நடு நடுவே வாக்கி டாக்கியில் அதிகாரிகளிடம் பேசுவதும் முக மலர்ச்சியுடன் பணி செய்வதும் நேரம் தவறாமல் பணியாற்றுவதையும் கண்ட போது மாதராக பிறக்க மாதவம் செய்ய வேண்டும் என்று முதியோர் மொழி இவர்களுக்காக சொல்லப்பட்டதோ என்று நினைக்க தோன்றியது.